1986 மே 2]

திரு. சா. ஜெயச்சந்திரன்: தலைவர் அவர்களே, சத்துணவு மையங்கள் புதிதாகத் துவக்க வேண்டுமானால் அரசினுடைய சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்திற்கு வந்துதான் அதற்கான அனுமதி பெற வேண்டியிருக்கிறது. அதனால் இரண்டு வருடங்கள் ஆகிறது. ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவருடைய முழு உரிமையில் அவர்களே, புதிய சத்துணவு மையத்திற்கு உத்திரவிடுகிற முறையில் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, புதிய சத்துணவு மையங்கள் துவங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்து அரசுதான் முடிவுசெய்ய வேண்டும். ஆகவே அரசின் அனுமதியில்லாமல் அதைத் தொடங்குவதற்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 639 மற்றும் 640 மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

கதர் வாரியத்திற்கு வரவேண்டிய தொகை.

641—(*வினா எண். 7775)—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

31—3—1984 முடிய கதர் மற்றும் இதர வகை பொருட்கள் தமிழக அரசுத் துறைகளுக்கு விற்பனை செய்து இன்றுவரை வசூலாகாமல் நிலுவையில் உள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: தலைவர் அவர்களே, 31—3—1984 முடிய கதர் மற்றும் இதர வகைப் பொருட்கள் தமிழக அரசுத் துறைக்கு விற்பனை செய்த வகையில் 31—3—1986 முடிய வசூலாகாமல் நிலுவையில் உள்ள தொகை ரூ. 50,10,236 ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.